ஆரம்பிக்க அனுமதியும் கொடுத்து, கட்டடம் கட்டுவதற்கும், சத்துணவு மையம் ஆரம்பிப்பதற்கும் உத்தரவு வழங்கிய மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மதுரை மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் எத்தனை பள்ளிகள் உள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டத்தில் மொத்தம் 20 பள்ளிகள் இயங்கி வருகின்றன. ஆரம்ப பள்ளிகள் 12, நடுநிலைப்பள்ளிக்ள் 6, உயர்நிலைப்பள்ளி 1, மேனிலைப் பள்ளி 1, ஆக 20 பள்ளிகள் தற்போது இயங்கி வருகின்றன.

முற்பகல் 11.00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் சிறிது நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 180, டாக்டர் எம். கருப்புசாமி, மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர்.

180—

அணைகளில் மீன் வளர்ப்பை அதிகப்படுத்த நடவடிக்கை

***22461**—டாக்டர் எம். கருப்புசாமி :*

மாண்புமிகு மீனளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளில் எந்த வகையான மீன்கள் வளர்க்கப்படுகின்றன?

(ஆ) மீன் வளர்ப்பை அதிகப்படுத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார், மீனளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நீலகிரி மாவட்டத்தில் உள்ள அணைகளில் கண்ணாடிக் கெண்டை, புல்கெண்டை, வெள்ளிக்கெண்டை மீன் இனங்கள் இருப்புச்

செய்யப்பட்டு வளர்த்தெடுக்கப்படுகின்றன. உதகை ஏரியில் இவை தவிர திலேபியாவும் உள்ளன. மலையுச்சி நீரோடைகளில் மீனளத் துறையால் பாதுகாக்கப்படும் 'ட்ரவுட்' எனப்படும் குளிர்நீர் மீன் அந்த நீரோடைகளுடன் தொடர்புடைய எமரால்ட் மற்றும் பைகாரா நீர்த்தேக்கங்களில் வருவதுண்டு.

(ஆ) மலைப்பகுதி நீரோடைகளில் அரசால் பாதுகாக்கப்படும் 'ட்ரவுட்' இன மீன்களை விருத்தி செய்ய 'அவலாஞ்சி'யில் பொரிப்பகம் அமைத்து மீன்குஞ்சுகள் உற்பத்தி செய்து நீரோடைகளின் மீன்வளம் பெருக்கப்பட்டு வருகிறது. மற்றும் 'ட்ரவுட்' மீன் இனத்தை அதிக அளவில் உற்பத்தி செய்வதற்காக 'ட்ரவுட்' மீன்குஞ்சு உற்பத்திப் பண்ணைக்கு தேவையான தெள்ளத் தெளிவான நீரைக் கொண்டுவர மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம் செலவில் நிரந்தரமான தடுப்பு அணை ஒன்று கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டத்தின் மலை உச்சியில் உள்ள தெளிந்த நீர் ஓடையில் 'ட்ரவுட்' என்று சொல்லக்கூடிய மிகச் சிறந்த சுவையான மீன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஆனால் அந்த மீன் வகைகளை எல்லாம் உல்லாசப் பயணிகள் தூண்டில் மூலம் பிடிப்பதற்கு மட்டும்தான் அனுமதி வழங்கப்பட்டு இருக்கிறது. அந்தச் சுவையான மீன்களை வெளிமார்க்கெட்டில் விற்பதற்கு அரசு மூலமாக நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, 'கட்லா, மெருகால், ரோக், சில்வர்காக், காமன்காக்' போன்ற இந்த மீன்கள் எல்லாம் எங்கே வேண்டுமானாலும் வளரும். ஆனால் குளிர்ந்த நீரிலே சில வகையான மீன்கள்தான் வளரும். உதராணத்திற்கு ''ட்ரவுட்'. இந்த 'ட்ரவுட்' என்கிற மீன்வகை நம்முடைய இந்திய மீன் வகையைச் சார்ந்தது அல்ல. ஆங்கிலேயர்கள் நம்முடைய நாட்டை ஆண்டபோது, அப்போது வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து, அதை இனவிருத்தி செய்து, நம்முடைய சீதோஷ்ண நிலைக்கு 'சூட்' ஆகிவிட்டதன் காரணமாக–'சூட்' என்றால், பொருந்திவிட்டதன் காரணமாக– இப்போது அரசால் அந்த இனம் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இதை 'ஆங்குலர் ஃபிஷ்' என்று சொல்வார்கள். அதாவது அது சுற்றுலாப் பயணிகளைக் கவரவேண்டும் என்பதற்காகவே உதகை ஏரியிலே அதைத் தூண்டில் போட்டு பிடிக்கவேண்டும் என்பதற்காக அரசு அந்த மீன்களைப் பாதுகாத்து வருகிறது. அதை அபிவிருத்தி செய்வதற்காகவே,

நம்முடைய போற்றுதலுக்குரிய தமிழகத்தினுடைய முதலமைச்சர், இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 5 லட்சம் ரூபாய் செலவில் ஒரு தடுப்பு அணையைக் கட்டி, அதை இனவிருத்தி செய்வதற்காகவே, அந்தப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களால் வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட உயர்ந்த வகையான அந்த மீன்களை நமது தமிழ்நாட்டில் மலை உச்சியில் இருக்கின்ற இந்நாட்டு மீன்களோடு சேர்த்து ஒரு புதிய கலப்பினத்தை உருவாக்குவதற்கு ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா? மேலும் அவ்வகை மீன்களால் கடந்த வருடம் கிடைத்த மொத்த வருமானம் எவ்வளவு என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மருத்துவராக இருக்கிறார்கள். இதுவரையிலும், ட்ரவுட் என்கிற அந்த மீனை நம்முடைய இந்திய இனத்தோடு சேர்த்து, இதுபோன்ற ஒரு ஆராய்ச்சியை மேற்கொண்டது இல்லை. நல்லதொரு யோசனையை உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள். அதைப்போன்ற ஒரு ஆராய்ச்சியை அரசு மேற்கொள்வதற்கு எல்லாவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இவர் விலங்கின டாக்டர் அல்ல; புருஷோத்தமன்தான் அந்த டாக்டர். இரண்டு பேரையும் மாற்றிச் சொல்கிறீர்கள். இவர் உங்களுக்கு வைத்தியம் பார்க்கிறவர். திரு. வி. கே. சின்னசாமி.

திரு. வி. கே. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அணைகளிலே மீன்களை வளர்க்கின்ற திட்டத்தைப் பற்றி எடுத்துவைத்தார்கள். கிராமப்பகுதிகளில் உள்ள விவசாயிகள் நிலங்களிலே நிறைய கிணறுகளை வைத்திருக்கிறார்கள். அதேபோன்று வீடுகளிலேயும், குடிநீருக்காக நிறைய கிணறுகளை, 'ஓப்பன் வெல்ஸ்களை' வைத்திருக்கிறார்கள். நாம் எப்படி வீட்டில் தோட்டங்களை அமைத்து, நமது வீட்டிற்குத் தேவையான காய்களை உற்பத்தி செய்கிறோமோ, அதைப்போல, விவசாயிகள் நிலங்களில் வைத்திருக்கிற கிணறுகளிலும், குடிநீருக்காக வீடுகளிலே வைத்திருக்கிற கிணறுகளிலும், மீன்களை வளர்ப்பதற்கு விவசாயிகளுக்கு இலவசமாக மீன்குஞ்சுகளைக்

கொடுப்பதற்கு ஏதேனும் திட்டம் இருக்கிறதா? அதை வழங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துறையின் மூலமாகவும், மீன் வளர்ச்சிக் கழகத்தின் மூலமாகவும் மீன் வளர்ச்சி மேம்பாட்டு முகமையின் மூலமாகவும், மீன்களை வளர்ப்பதற்குத் தேவையான மீன்குஞ்சுகள் வழங்கப்படுகின்றன. வழங்கப்படுகின்றன என்றால் இலவசமாக வழங்கப்படுவதில்லை. ஏறக்குறைய 9 வெரைட்டிகள் 'கட்லா, மெருகால், ரோக்' போன்ற வெரைட்டிகள் எல்லாம் விரைந்து வளரக்கூடியவையாகும். அப்படி விரைந்து வளரக்கூடிய தன்மையைக் கொண்ட அந்த மீன்களை இலவசமாக வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை. தேவைப்பட்டால், தாராளமாக மீன்குஞ்சுகள் கிடைக்கின்றன. அந்தந்த மாவட்டங்களில் உள்ள மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையை அணுகினால், அத்தகைய மீன்குஞ்சுகளை அவர்களுக்குத் தருவதற்குத் தயாராக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினரவர்களுக்கு அந்த வகையான மீன் குஞ்சுகள் தேவை என்றாலும்கூட, தருவதற்கு—இலவசமாக இல்லை—கட்டணத்தில் தருவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

முற்பகல் 11.05

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேள்வி கேட்ட நேரத்திலே எந்த ரகக் குஞ்சுகள் என்று சொல்லவில்லை. எங்களுடைய இரண்டு மாவட்டங்களிலும் அங்கேயிருக்கின்ற தோட்டங்களிலும் வீடுகளிலும் இருக்கின்ற பெரிய கிணறுகள் கிட்டத்தட்ட குளங்களைப் போல இருக்கும். அங்கெல்லாம் முன்பு செங்கன் அவரி என்கின்ற வகை வளர்ப்பார்கள். இப்போது அந்த வகை இல்லை. பொள்ளாச்சி தாலுக்காவில் இரண்டொரு இடங்களிலே இருக்கிறதே தவிர, அநேகமாக அந்த இனம் இனப் பெருக்கத்தையே குறைத்துக்கொண்டு நிறுத்திவிட்டது. அந்த செங்கன் அவரி என்கின்ற இனம் தான் கிணறுகளிலே விட்டால், தூண்டில் போட்டு பிடிக்கக் கூடிய இனமாக இருக்கின்றது. எனவே, செங்கன் அவரி இனத்தை விருத்தி செய்து, அதை அனைவருக்கும் விநியோகிப்பாரா என அறிய விரும்புகிறேன்.

1995 மார்ச் 30]

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இலவசமாக மீன் குஞ்சுகள் வழங்குவதற்கு சாத்தியக்கூறுகள் இல்லை. இன்றைக்கு மீன் வளர்ப்போர் மேம்பாட்டு முகமையின் மூலமாக, அது வருவாய்த்துறை குளமாக இருக்கலாம், பொதுப்பணித் துறையைச் சேர்ந்த குளமாக இருக்கலாம், அல்லது உள்ளாட்சித் துறையைச் சேர்ந்த குளமாக இருக்கலாம். அந்தக் குளங்களை முகமை எடுத்துக்கொண்டு அந்தக் குளங்களிலே மீன்களை வளர்க்கவேண்டுமென்பதற்காக விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து, அந்த அடிப்படையிலே பயிற்சி கொடுக்கப்பட்டு, அவர்களுக்கு மீன் குஞ்சுகள் கொடுக்கப்படுகின்றன. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரவர்கள் குறிப்பிட்ட அந்த அவரி மீன் வகைகள், அந்தக் குஞ்சுகள் தேவையென்றாலும்கூட, அந்த மாவட்டத்திலுள்ள முகமையை அணுகினால் அவர்களுக்கு அந்தக் குஞ்சுகளைத் தருவதற்குத் தயாராக இருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எதிர்க்கட்சித் தலைவர் கேட்பது, அந்தவகை மீனே இப்போது கிடைக்கவில்லை; கிடைப்பதற்கு உரிய வாய்ப்பு உருவாக்கப்படுமா என்பதுதான்.

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்: அந்த வகை மீன்கள் இருக்கின்றன. மிகவும் குறைவாக இருக்கிறது. குறிப்பாக பரம்பிக்குளம் அணையில் அவரி இனம், செங்கன் அவரி இருக்கிறது. அங்கேயிருந்து சில நேரங்களில் எங்கள் பகுதிக்கு அது தப்பி வருவதுண்டு. அந்த செங்கன் அவரி இனத்தை அபிவிருத்தி செய்து, இலவசமாக வினியோகிக்காவிட்டாலும் கூட, கட்டணத்திலே வினியோகிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி. ஜெயகுமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில வகை மீன்கள், உதாரணத்திற்கு கட்லா, மெருகால், ரோக் போன்ற மீன்கள் எல்லாம் செயற்கையாகவே இன விருத்தி செய்யப்படும். முர்ரேல் என்று சொல்லக் கூடிய விராலை செயற்கையாக இன விருத்தி செய்யமுடியாது. 'நேச்சுரல் கலெக்ஷன்'– அதுவும் அந்தக் குஞ்சுகளை எல்லாம் காவிரியிலிருந்து, இல்லையென்றால், தேவைப்பட்டால் ஆற்றுப்படுகையிலிருந்து அதைக் கலெக்ட் செய்து, அதை வளர்ப்பார்கள். அதுபோன்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்கின்ற அந்த வகையான மீன்கள்கூட இயற்கையாக கலெக்ட் செய்யப்படுகின்ற காரணத்தால், அதிலே செயற்கையாக இன அபிவிருத்தி செய்யமுடியாத காரணத்தால், குஞ்சுகள் வழங்க முடியாத ஒரு சூழ்நிலை.

167—

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் பழுதடைந்த கட்டிடத்தைக் கட்டுதல்

***9385**— திரு.ஆர். ஈஸ்வரன் :*

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வாசுதேவநல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்டிடங்களும் பழுதடைந்து மோசமான நிலைமையில் இருக்கின்ற காரணத்தால், புதிய கட்டிடங்கள் கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பழுது பார்க்க முடியாத அளவுக்கு சேதமடைந்துள்ள கட்டிடங்களைத் திரும்பக் கட்டவும், மற்ற கட்டிடங்களை சீரமைக்கவும், ரூ. 21.00 இலட்சம் தேவைப்படும். கட்டிடங்களின் பராமரிப்புக்கு அளிக்கப்படும் வருடாந்திர மானியத்திலிருந்து இப்பணிகளைச் செய்ய இயலாது. இதற்கென அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்யும் தருணத்தில் இப்பணிகளை எடுத்துச் செய்ய இயலும்.

168—

ராதாபுரம் தொகுதியில் வீட்டு வசதி வாரிய வீடுகள் கட்டுதல்

***13808**—திருமதி ரமணி நல்லதம்பி :*

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ராதாபுரம் தொகுதி, கோட்டைக்கருங்குளம் அருகில் வீட்டு வசதித்துறை மூலம் இருபது வீடுகள் கட்டி முடிக்கப்படாத நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதைக் கட்டி முடிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சே. ரகுபதி, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,